**MCOP NO:5370/2021 DATE:05.03.2024**

ம.சா.1

பெயர்.கோவிந்தராஜுலு

த/பெ.திரு.ராஜமன்னார்

வயது. 58

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவில் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 1 முதல் 7 வரை தாக்கல் செய்கிறேன். மனுப்படி இழப்பீடு வழங்க வேண்டுகிறேன்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

பிரமாண வாக்குமூலத்தில் சங்கதிகள் எனக்கு தெரியும். வயதை நிரூபிக்க ஆவணங்கள் தாக்கல் செய்து இருக்கிறேனா என்றால் இல்லை. 28.08.2021 அன்று மதியம் 1.30 மணியளவில் மதுரவாயில் மேட்டுகுப்பம் அருகே மதிய சாப்பிடுவதற்காக சென்ற போது எதிரே வந்த வாகனம் அதிவேகமாக வந்து என் மீது மோதிவிட்டது. முதல் தகவல் அறிக்கையில் நான் இருசக்கர வாகனத்தில் பின்னால் அமர்ந்து சென்றதாக உள்ளது, நான் தலைகவசம் அணிந்து இருந்தேனா என்றால் அணிந்து இருந்தேன். நான் சென்ற சாலையானது அகலமான சாலை தான். குற்ற இறுதி அறிக்கை, மாதிரி வரைபடம், மோட்டார் வாகன ஆய்வறிக்கை, ஒட்டுநர் உரிமம் ஆகியவற்றை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் மீது உள்ள தவறை மறைப்பதற்காக தான் அவற்றை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநருக்கு உரிய உரிமம் இல்லை என்றும், அதனால் 2ம் எதிர்மனுதாரர் நஷ்டஈடு வழங்க கடமைபட்டவர் இல்லை என்றும், சொன்னால் சரியல்ல. காவல்துறையினர் என்னை விசாரித்தார்களா என்றால் மருத்துவமனையில் என்னை விசாரணை செய்தார்கள். காவல்நிலையத்தில் புகார் கொடுத்தது யார் என்பது எனக்கு தெரியாது. 2 நாட்கள் கழித்து தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யபட்டுள்ளது என்றால் சரிதான். நான் முதல் சிகிச்சை KMC மருத்துவமனையில் 1 மாதம் எடுத்து கொண்டேன். 2வது முறையும் சிகிச்சை எடுத்து கொண்டேன், ஆனால் அதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை. எனக்கு வலது காலில் எலும்பு முறிவு ஏற்பட்டது.

விபத்திற்கு முன்பு கார்பென்டர் வேலை செய்தேன். 1ம் எதிர்மனுதாரரின் வாகனம் பழுது நீக்கம் செய்ய கொடுத்து இருந்த போது அந்த வாகனத்தை தவறாக பயன்படுத்தியவர் விபத்தை ஏற்படுத்திவிட்டார்கள் என்றும், அதனால் அந்த நபரை தரப்பினராக சேர்க்காமல் இந்த வழக்கு நிலைக்கததக்கதல்ல என்றும், சொன்னால் சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளில் கோரியுள்ள இழப்பீடு தொகை அதிகம் என்றால் சரியல்ல. அதனால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. இந்த மனு 2ம் எதிர்மனுதாரர் பொறுத்து தள்ளுபடி செய்யபட வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**x**

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.